

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (15.10.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், 5 வருடங்களில், 2000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சென்னை போரூரிலுள்ள ஹிட்டாச்சி குழுமத்தைச் சேர்ந்த ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்க திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், ஹிட்டாச்சி நிறுவனத்தின் உலகளாவிய தலைமைச் செயல் அலுவலர் திரு. ஆண்ட்ரியாஸ் ஷீரன்பெக், ஹிட்டாச்சி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வேணு நுகரி மற்றும் அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (15.10.2025) நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், நீர்வளத்துறையில் 2024–2025 ஆண்டில் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளுக்கான (பட்டயம்), தேர்வின் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை வரைதொழில் அலுவலர் (சிவில்) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 77 தெரிவாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நீர்வளத்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சு. கோபாலகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கரூர் சம்பவம்: காவல்துறை மீது அபாண்டமாக பழி சுமத்துவதா?

# எதிர்க்கட்சிகள் பிரச்சினையை திசை திருப்ப வேண்டாம்!

## பேரவையில் காரசார விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசுகையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, அக்.17 –

**கரூரில் நடைபெற்ற துயரச் சம்பவம் தொடர்பாக சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கடும் வாக்குவாதம் நடைபெற்றது. அப்போது எதிர்க்கட்சியினரின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு உடனுக்குடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்.**

**அப்போது அவர் பேசுகையில், காவல்துறை மீது அபாண்டாக பழி சுமத்துவதா என்றும், பிரச்சினைகளை திசை திருப்ப வேண்டாம் என்றும் குறிப்பிட்டார்.**

கரூரில் நிகழ்ந்த துயர சம்பவம் தொடர்பான பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் உரையினிடையே குறுக்கிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனுக்குடன் அளித்த பதில்கள் வருமாறு :–

'ஊரிலே கல்யாணம் என்றால், மார்பிலே சந்தனம்' என்று சொல்வார்கள். இது அதுபோன்று இருக்கிறது. அதாவது கூட்டணிக் கட்சிக்கு ஆள் தேடிக் கொண்டிருக்கிறீர்கள். தேடிக்கொண்டிருப்பதன் விளைவுதான் இது. அந்த அடிப்படையில்தான் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இதை அரசியலாக்க வேண்டாம்; இதை அரசியலாக்க நான் விரும்பவில்லை என்று பலமுறை சொல்லிவிட்டேன். ஆனால், ஏதோ உள்நோக்கம் இருக்கிறது, சந்தேகம் இருக்கிறது என்று தேவையில்லாமல் பதிவு செய்கிறார். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு நபர் கமிஷன் அமைத்தது குறித்த ஒரு செய்தியை இங்கு சொன்னார்கள். தனி விமானத்தில் அன்று இரவோடு இரவாக சென்றார்கள் என்று சொன்னார்கள். அது தவறு. அவர் 28–ம் தேதி மதியம்தான் சென்றிருக்கிறார்கள். 27–ம் தேதி இரவு அறிவிக்கப்பட்டது. 28–ம் தேதி மதியம்தான் சென்றிருந்தார், அதுதான் உண்மை. தனி விமானத்தில் செல்லவில்லை என்பதும் உண்மை.

**தூத்துக்குடி சம்பவத்தில் என்ன சொன்னீர்கள்!**

முதலமைச்சரின் கடமை என்பதால்தான் நான் சென்றேன். அவர் சொல்வதில் எந்தத் தவறும் கிடையாது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், தூத்துக்குடியில் நடைபெற்ற சம்பவத்திற்கு அவர் என்ன சொன்னார்? பத்திரிகை நிருபர் கேட்டபோது அவர் என்ன சொன்னார்? சொல்லட்டுமா? (கூச்சல்) (குறுக்கீடுகள்)

அந்த நேரத்தில் அவ்விடத்திற்கு அனைத்து அமைச்சர்களும் சென்று பார்த்தார்கள். எனவே, அந்தச் சூழ்நிலை வேறு, இந்தச் சூழ்நிலை வேறு. அந்தச் சம்பவம் கள்ளச் சாராயம் அருந்திவிட்டு இறந்தவர்கள். இந்த சம்பவம் அப்படி அல்ல. இவர்கள் அப்பாவி மக்கள். மிதிபட்டு இறந்திருக்கிறார்கள். இவ்வாறுதான் நிகழ்ந்திருக்கி றது. இதையும் சிந்தித்துப் பாருங்கள்.

**அதிகாரிகள் பேட்டி கொடுக்கவில்லை!**

ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. காவல்துறை DGP தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. இதற்கிடையிலே வேண்டுமென்றே திட்டமிட்டு, இதை அரசியலாக்கி, பொது வெளியில் social media–வில் பல வதந்திகள் பரவிக் கொண்டிருக்கின்றன. அந்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த அதிகாரி கூறினார். அரசியல் எண்ணத்தோடு ஒன்றும் அவர் பேட்டிக் கொடுக்கவில்லை. என்ன நடந்தது என்பதை அவர் விளக்கியிருக்கிறார். அதுதானே தவிர, வேறு எந்தத் தவறும் இல்லை.

ஏற்கெனவே, கொரோனா காலத்தில் சில அதிகாரிகள் பேட்டி கொடுக்கவில்லையா? முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் மருத்துவமனையில் இருந்தபோது ஓர் அதிகாரி பேட்டி கொடுக்க வில்லையா? அம்மையார் அவர்கள் மருத்துவமனையில் இருந்தபோது அதிகாரி பேட்டி கொடுக்கவில்லையா? அதுபோலத்தான் இதுவும்.

அரசியல் ரீதியாக பதில் சொல்லவில்லை. அலுவல் ரீதியாகத்தான் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதை முதலில் புரிந்துகொள்ளுங்கள்.

கரூரைப் பொறுத்தவரை பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு தகுதியான இடத்தைத் தேர்வு செய்வதற்கான அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்று நடந்திருக்கிறது. கரூர் வருவாய் கோட்டாட்சியர் தலைமை யில் 24–3–2025 அன்று நடைபெற்றிருக்கிறது. அதில் அ.தி.மு.க. உள்ளிட்ட அந்த மாவட்டத்தினுடைய நிர்வாகிகள் கலந்துகொண்டு, ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். எந்தெந்த இடத்தைக் கொடுக்க வேண்டும், எந்தெந்த இடத்தை கொடுக்கக் கூடாது என்று, தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறு எதுவும் இல்லை. முதலில், இதை எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

**தூத்துக்குடி துப்பாக்கி சூடு: பேட்டி தரவில்லையா?**

தூத்துக்குடி சம்பவத்தைத்தான் சொன்னாரே தவிர, யாரையும் குறை சொல்லியோ, குற்றம்சாட்டியோ பேசவில்லை. தூத்துக்குடி சம்பவத்தைச் சொல்லக்கூடாதா? தூத்துக்குடி சம்பவம்தான் சொன்னார். குறிப்பிட்டு யாரையும் குற்றம் சொல்லியோ, குறை சொல்லியோ பேசியிருந்தால் நீக்குங்கள். அதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. துப்பாக்கிச் சூடு நடைபெற்றதா இல்லையா? அதைத்தான் அவர் சொன்னரே தவிர, வேறொன்றுமில்லை. தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதா இல்லையா?

யாரையாவது இன்னார்தான் என்று குறிப்பிட்டுச் சொன்னார் என்றால் அதை நீக்க வேண்டும். அவ்வாறில்லாமல் அந்த ஆட்சியைப் பற்றி குறை சொல்லிப் பேசினார் என்றால் அதனை நீக்குங்கள். அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்போதிருந்த ஆட்சியைப் பற்றி குற்றம் சொல்லிப் பேசியிருந்தால் கூட அதனை நீக்குங்கள். நான் வேண்டாமென்று சொல்லவில்லை.

கரூர் சம்பவம் குறித்துத்தான் CBI enquiry செய்யப்போகிறதே! (கூச்சல்–குழப்பம்) இல்லை, இல்லை. கரூர் சம்பவம் குறித்துத்தான் CBI enquiry செய்யப் போகிறதே!

காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் கு.செல்வபெருந்தகை அவர்கள் பேசுகிறபோது, உச்ச நீதிமன்றம் அமைத்திருக்கக்கூடிய ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் கண்காணிப்பு குழுவிலே தமிழ்நாட்டைச் சார்ந்திருக்கக்கூடிய ஐ.பி.எஸ் அதிகாரி இடம்பெறுவது குறித்து தெரிவித்திருக்கக்கூடிய கருத்துக்களை பற்றி இங்கே பேசியிருக்கிறார். இன்னும் சொன்னால், தமிழ்நாட்டு மக்களுக்கே இது வேதனைக்குரிய ஒன்றாக அமை ந்திருக்கிறது. இதுகுறித்து உரிய சட்ட ஆலோசனை பெற்று மாண்பமை உச்ச நீதிமன்றத்தை நிச்சயமாக இந்த அரசு அணுகும், அணுகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**காவல்துறைக்கு சல்யூட் சொன்னவர்!**

உறுப்பினர் கு.செல்வபெருந்தகை அவர்கள் காவல் துறை சிறப்பாக பணியாற்றியது குறித்து இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதே நேரத்தில் ஒன்றை விட்டுவிட்டார். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் இங்கே பேசுகிறபோது, காவல் துறை பாதுகாப்பு சரியாக கொடுக்கவில்லை என்று காவல் துறையை குறை சொல்லி பேசியிருக்கிறார். ஆனால், அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழக வெற்றிக் கழகத்தினுடைய தலைவர் பேச்சை தொடங்குவதற்கு முன்பே, பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்பே காவல் துறைக்கு முதலில் எனது 'Salute' என்று அடித்துவிட்டு, சரியான பாதுகாப்பு தந்திருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டுத்தான் பேசினார் என்பதையும் நான் இந்த அவையிலே பதிவு செய்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தப் பிரச்சினை இந்த அவையிலே எழுப்பப்பட்டு, அப்பொழுது நான் பதில் சொல்லியிருக்கிறேன். அனுமதிக்கப்பட்டி ருக்கக்கூடிய இடத்தைப் பொறுத்தவரையில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. அனுமதி இல்லாத இடங்கள் என்று வரும்போதுதான் பிரச்சினை வருகிறது. அதனால்தான் நீதிமன்ற த்திற்குச் சென்று அங்கு அணுக வேண்டிய சூழல் ஏற்படுகிறதே தவிர வேறு அல்ல; ஏதாவது அனுமதிக்கப்பட்ட இடத்திலே அப்படி ஏதாவது உங்களுக்கு அனுமதி தரவில்லையென்று சொன்னால் அதை ஆதாரத்தோடு நீங்கள் சொல்வீர்களேயானால், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

**சி.பி.ஐ. விசாரணையில் எல்லா உண்மைகளும் வெளிவரும்!**

உறுப்பினர் lathi charge பற்றி சொன்னார்கள். அப்படி எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை என்பதை நான் அழுத்தத்திருத்தமாக சொல்லமுடியும்.

செருப்பு வீச்சைப் பற்றிச் சொல்கிறார். நானும் டிவி–யில் பார்த்தேன். நிச்சயமாக திட்டமிட்டு யாரும் செய்ததில்லை. அங்கு தண்ணீர் வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்களுடைய கவனத்தைத் திசைதிருப்ப வேண்டும் என்பதற்காகத் தான் செய்யப்பட்டது என்று நான் கருதுகிறேன். எது எப்படி இருந்தாலும் நீங்கள் சொன்ன கருத்தின்படி CBI விசாரணை வந்துள்ளது. அதில் எல்லா உண்மைகளும் வெளிவரப் போகிறது. அப்பொழுது தெரியும். இப்பொழுதே இதைப்பேசி நீங்கள் இதை திசை திருப்புவதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எந்தவித ஆதாரமும் இல்லாமல் இப்படியொரு காவல் துறைமீது தேவையற்ற முறையில், அபாண்டம் சுமத்துகிற வகையில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். இது அவைக்குறிப்பில் பதிவு செய்வது பொருத்தமாக இருக்காது என்பது என்னுடைய கருத்து. எதுவாக இருந்தால் தனிப்பட்ட முறையில் என்னிடத்தில் சொன்னால் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கரூர் சம்பவம் தொடர்பான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மன்னை ப. நாராயணசாமி

**அக்டோபர் 17 (1993)**



'தஞ்சை மாவட்ட பெரியார்' என்று போற்றப்பட்டவர்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் சீடராய், அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற இளவலாய், கலைஞருக்கு உற்ற தோழராய் விளங்கியவர்.

தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் முதன்முதலாக அறிவிக்கப்பட்டபோது "பெரியார் விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்கள் 1,05,955 பேருக்கு

# ரூ.175 கோடியே 51 இலட்சம் போனஸ் - கருணைத் தொகை வழங்கல்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தகவல்!

*சென்னை, அக் 17-*

*முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு, 2024-2025ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை 175 கோடியே 51 இலட்சம் ரூபாய், இன்று (15.10.2025) 1,05,955 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல் தெரிவித்துள்ளார்.*



*தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையை பெருமளவு பூர்த்தி செய்வதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. எட்டு அரசு போக்குவரத்து கழகங்களின் 20,912 பேருந்துகள், 10,125 க்கும் மேற்பட்ட வழித்தடங்கள் மூலம் குக்கிராமம் முதல் மாநகரங்கள், உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்குதடையின்றி, போக்குவரத்து சேவை வழங்குவதன் மூலம் தினசரி 1.97 கோடி மக்கள் பயணிக்கின்றனர். இதில் 60% பயணிகள் கட்டணமில்லா அல்லது சலுகை கட்டணத்தில் பயணிக்கின்றனர். குறிப்பாக தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பங்களிப்பு இன்றியமையததாகும். இதனால் தமிழ்நாட்டின் பேருந்து வலையமைப்பு ஒரு முக்கியமான சமூக பாதுகாப்பு வலையமைப்பாக விளங்குகிறது.*

*முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, போக்குவரத்து தொழிலாளர்களின் உழைப்பை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 1,05,955 பணியாளர்களுக்கு, 2024 2025 ஆம் ஆண்டிற்காக வழங்கப்படும் மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை 175 கோடியே 51 இலட்சம் ரூபாய் அவர்களின் வங்கி கணக்கில் இன்று (15.10.2025), வழங்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

---

### நாகையில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள்,

# ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் என். கௌதமன் -ஆர்.அருள்செல்வம் - இரா.சங்கர்- ஜெயபிரகாஷ் பங்கேற்பு!

நாகை, அக். 17 –

நாகை மாவட்ட தி.மு.க. தொகுதி பார்வையாளர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாகையில் தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப. கோவிந்தராஜன் தலைமை தாங்கினார். தொகுதி பார்வையாளர்கள் ஜெயப்பிரகாஷ், இரா.சங்கர், ஆர்.அருள்செல்வம், மாவட்ட கழகபொருளாளர் மு.லோகநாதன், துணை செயலாளர்கள் சோ ரவிச்சந்திரன், . கற்பகம்நீலமேகம் ஆகியோர் முன்னிலை வைத்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்து நாகை மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான எம்.கௌதமன் பேசினார்.

கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றிய கழக செயலாளர் ஆ தாமஸ் ஆல்வா எடிசன், செல்வ செங்குட்டுவன், மகா குமார், கே. பழியப்பன், என் சதாசிவம் சிக்கல் என். ஆனந்த், உதயம் வே.முருகையன், சோ.பா. மலர்வண்ணன், நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, மா.மீ. புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். பி.டி.சார்லஸ், எஸ்.பன்னீர்செல்வம், கே.பாண்டியன்,பேரூர் கழக செயலாளர்கள் மரியசார்லஸ், சி. சுப்பிரமணியன், முகமது சுல்தான், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ் குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, ப.உதயகுமார், அ.பாரி பாலன், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ஆர்.துரைராஜ், க.சத்தியமூர்த்தி, எஸ்.வி.டி.அருள், பெ.முருகானந்தம், இளம். சுந்தர், ஆர்.ஆர்.குலோத்துங்கன், சந்தோஷ், எஸ். பால்ராஜ், கமல், சுரேந்தர், தமயந்தி, புவனேஸ்வரிசெந்தில் மற்றும் சார்பு அணி அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கழகத் தலைவர் தளபதி அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளை வெல்வோம் என்பதற்கினங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள நாகை மாவட்டத்தில் உள்ள நாகை, கீழ்வேளூர், வேதாரண்யம் ஆகிய 3 தொகுதிகளிலும் கழக அரசின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துக் கூறி கழக வெற்றிக்கு உழைத்திடுவது என்றும், ஒவ்வொரு பூத்திலும் 30க்கும் மேற்பட்ட நபர்களை வாட்ஸ் அப் சேனலில் இணைப்பது என்றும்அதனை 22.10.2025 க்குள் முடித்து ஒப்படைப்பது என்றும் இந்த பணிகளில் BLA2, BDA க்கள் முழு அளவில் ஈடுபட்டு விரைவாக பணிகளை முடிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### மதுரை வடக்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் மதுரை வடக்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அ.முத்தையன் அவர்கள் அலங்காநல்லூர் வடக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால்;

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, அக்டோபர் 18 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மதுரை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ -வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 15.10.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் ஈரோடு வடக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஈரோடு வடக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - முனைவர் தா.கி.கிருபாகரன், 320, இந்திரா நகர், புஞ்சைதுறையம்பாளையம், கோபி, ஈரோடு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) க.சூரியபிரசாந்த், 6/18, அண்ணமார் கோவில் தெரு, தட்டாம்புதூர் குடியிருப்பு, கடத்தூர், சத்தி, ஈரோடு மாவட்டம். 2) கு.செந்தூர், 294, குருமந்தூரார் இல்லம், தாளவாடி, ஈரோடு மாவட்டம். 3) செ.சுதா, 193, கொண்டையம்பாளையம், வரப்பாளையம் அஞ்சல், நம்பியூர், ஈரோடு மாவட்டம். 4) வி.கே.சுகானந்தம், 5/70, ரைஸ் மில் வீதி, பா.வெள்ளாளபாளையம், கோபி, ஈரோடு மாவட்டம். 5) சே.முத்துகுமார், 266, செ.அம்மன் கோவில் தோட்டம், எண்ணமங்கலம், அந்தியூர், ஈரோடு மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 15-10-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

---



ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்ற தொகுதி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் பிரம்மதேசம் ஊராட்சியில் புதுகரடியானூர் பகுதியில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 3.50 லட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் வடிகால் அமைக்கும் பணியினை ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். நிகழ்வில் சரவணன், நாகேஸ்வரன், விவேகம் பாலுசாமி, மணக்காடு சண்முகம், அங்கமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.